OS.117/2018 – Date : 29.01.2026

PW1 – நல்லம்மாள்(எ) தங்கமணி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது தாயார் அழகம்மாள், 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து வா.சா.ஆ.6–தானபத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரி. ஆனால் அது செல்லாது.

எனது தாயார் அழகம்மாள், தாவாசொத்தின் மற்றொரு பகுதியை பொறுத்து 2ம் பிரதிவாதிக்கு மற்றொரு வா.சா.ஆ.8–தானபத்திரம் எழுதி கொடுத்துள்ளார் சரி. ஆனால் அதுவும் செல்லாது.

எனது தாயார் அழகம்மாள், 4ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து வா.சா.ஆ.7–தானபத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரி. ஆனால் அது செல்லாது. நான் தாக்கல் செய்துள்ள 5 பட்டாக்களிலும் எனது தாயார் பெயர் இல்லை என்றால் எனக்குத் தெரியாது.

எனது தாயார் மேற்படி 3 தானப்பத்திரங்கள் எழுதிகொடுத்ததால்தான் எனது தாயார் பெயரில் தாவா சொத்திற்கான பட்டா இல்லை என்றால் சரியல்ல. நானும் தாவா சொத்தில் சுவாதினத்தில் இல்லாததால்தான் எனது பெயரில் பட்டா இல்லை என்றால் சரியல்ல.

நான் தாவா சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வருவதை நிரூபிக்க சாகுபடி அடங்கல் கணக்கோ அல்லது அனுபவ சான்றோ சேலம் வட்டாட்சியரிடமிருந்து ஆவணங்கள் வாங்கி ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

5 முதல் 10 பிரதிவாதிகள் எங்கள் குடும்பத்திற்கு சேர்ந்தவர்கள் இல்லை என்றால் சரி. 5 முதல் 10 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எந்த பாகமும் இல்லை என்றால் சரி.

வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ8 படி 2வது பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டது என்றால் சரி, ஆனால் அது செல்லாது, பொய்.

வா.சா.ஆ.7 படி 4வது பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டது என்றால் சரி, ஆனால் அது செல்லாது, பொய். வா.சா.6, வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் சட்டப்படி செல்லும், அவைகள் என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி மகாராணி, 3ம் பிரதிவாதி செந்தில்நேருவிற்கு தாவா சொத்தை பொறுத்து வா.சாஆ–9 கிரயப்பத்திரம் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார், ஆனால் அது செல்லாது. வா.சா.ஆ–9 படி 3ம் பிரதிவாதி–செந்தில்நேருவின் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி, ஆனால் அது செல்லாது.

தாவா சொத்தில் கிணறு உள்ளது என்றால் சரி. அதற்கு 2ம் பிரதிவாதி தனது பெயரில் மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் அது பொய், அது செல்லாது. கெஜல்நாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் 2ம் பிரதிவாதி பயிர்கடன் வாங்கி தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்தார் என்றால் அது பொய், செல்லாது. மேற்படி வங்கியில் 2ம் பிரதிவாதி அவரது நகைகளை அடகு வைத்து அந்த தொகையை கொண்டு தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான கந்தாய வரியை 2ம் பிரதிவாதிதான் கட்டி வருகிறார் என்றால் அது பொய்.

சர்வே எண்.14/2ஏ1–ல் வீடுகள் உள்ளது என்றால் சரி. அந்த வீட்டிற்கு யார் பெயரில் வீட்டு வரி ரசீது உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி வீட்டிற்கு 2ம் பிரதிவாதி–மகாராணிதான் வீட்டு வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி–கௌரிமங்கலம் அவரது பெயரில் உள்ள வீட்டிற்கு அவர்தான் வீட்டு வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி–கௌரிமங்கலம், மூர்த்தி என்பவர் பெயரில் குதவைப்பத்திரம் எழுதிக்கொடுத்து கடன் வாங்கியிருக்கிறார் என்றால் அது பொய். எனது தாத்தா பெயர் என்ன என்றால் கருப்ப கவுண்டர். அவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4 பேர். அவருக்கு எத்தனை பெண் பிள்ளைகள் என்றால் 3 பேர். அவர்களின் பெயர் என்ன என்றால் பெயர் தெரியவில்லை.

அவர்களை நான் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. அய்யண்ணன் எனக்கு என்ன சொந்தம் என்றால் பெரியப்பா ஆவார்.

அய்யண்ணன், சேலம் முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் இந்த தாவா சொத்துக்களில் சில சொத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. அந்த வழக்கில் நான் ஒரு தரப்பினர் என்றால் சரி. அந்த வழக்கை நான் நடத்தவில்லை என்றால் சரி. தாவா சொத்தில் எனக்கு பாகமே இல்லை என்றால் சரியல்ல. 1985ல் எனக்கு திருமணம் ஆனது முதல் இன்றைய தேதி வரை நான் தாவா சொத்தில் சுவாதினத்தில் இல்லை என்றால் சரியல்ல. எனவேதான் எனக்கு தாவா சொத்து பற்றிய விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. வழக்கை கால தாமதத்துடன் தாக்கல் செய்துள்ளதால் வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.